# தக்கார் குரல்

உள்ளது உள்ளபடி

TNBIL/25/A2396

| மலர் 1 | இதழ் 10 | ஜூலை 2026 | மாத இதழ் | விலை ரூ.25 |
|---|---|---|---|---|
| Volume 1 | Issue 10 | July 2026 | Monthly Magazine | Price RS.25 |



## நெருங்கும் கழகங்கள் திசை மாறும் களம்



## கூடங்குளம் தகவல் திருட்டு கேள்விக்குறியாகும் தென்னிந்திய பாதுகாப்பு






## மேனுவல் கார்களை ஆட்டோமெட்டிக்காக மாற்றும் அற்புதம்



## நாடாளுமன்றத்துக்குள் திமுக - பாஜக கூட்டணி?


தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 இதழ் 1 அக்டோபர் 2025 மாத இதழ் விலை ரூ.25
அண்ணாமலையின் அரசியல் கணக்கு
திருச்செந்தூரில் கும்பாபிஷேகத்திற்கு பிறகு முதல் சூரசம்ஹாரம்
மலைக்க வைக்கும் மயக்க மருந்து மருத்துவம்!
நீலகிரி வரையாடுகள் எண்ணிக்கை!
தமிழகத்தை விஞ்சும் கேரளா
உங்களைப் பார்த்தால் பயமாய்த்தான் இருக்கிறது விஜய்

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 இதழ் 2 நவம்பர் 2025 மாத இதழ் விலை ரூ.25
நாகூர் தர்காவில் ஊழலா?
அதிமுக கோட்டையை தகர்க்கும் திமுக?
போலீஸ் கையிலெடுத்த புதிய உத்தி!
புதுச்சேரி கூத்து: உடைகிறது பாஜக கூட்டணி?

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 3 Issue 3 டிசம்பர் 2025 December 2025 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
ஒற்றைத் தேங்காய் லட்சம் ரூபாய்!
ஆன்லைனில் ரூ.150 கோடி ஸ்வாகா!
கந்தூரி விழாவில் கலகம்
S.I.R.-ஐ எதிர்ப்பது ஏன்?
EXCLUSIVE

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 4 Issue 4 ஜனவரி 2026 January 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
ரவுடிகள் உருவாவது எங்கிருந்து?
'ரவுடியிஸத்துக்கு சமூகமே பொறுப்பு!'
- நேர்காணல்
பாம்பை ஏவி தந்தை கொலை
-பின்னணி
பித்தப்பை கல் அதிகரிக்கும் ஆபத்து
பொறுப்பு டிஜிபி தொடர்வது நல்லதா?

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 5 Issue 5 பிப்ரவரி 2026 February 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
முற்றும் மோதல் திணறும் வி.ஐ.பி வேட்பாளர்கள்
சென்னை நீரில் தத்தளிக்கும்?
எச்சரித்த நிபுணர்?
அபாய மணி அடிக்கும் ஆய்வறிக்கை
-நேர்காணல்
தலைநகரை உலுக்கிய கொலை

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume-1 இதழ் 6 Issue 6 மார்ச் 2026 March 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
பழிதீர்க்கும் ஈரான்
அமெரிக்க தளத்தை தாக்கிய முதல்தேசம்
விவாகரத்து கோரும் விஜய் மனைவி
பின்னணியில் அரசியலா?
மதுராந்தகம் தொகுதி அசத்தும் எம்எல்ஏ
- நேரடி கள ரிப்போர்ட்

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume I இதழ் 7 Issue 7 ஏப்ரல் 2026 April 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
சாத்தான்குளம் வழக்கு 9 காவலர்களுக்கு தூக்கு
தீர்ப்பில் விளாசிய நீதிபதி
தனது கட்சியை தானே தோற்கடித்த கமல்
ஏற்பை இழந்த தேர்தல் அறிக்கைகள்

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume I இதழ் 8 Issue 8 மே 2026 May 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
மக்களின் முதல்வரான விஜய்..
முதலமைச்சர் தொடர விடுவார்களா?
முடிவுக்கு வந்தது இருதுருவ அரசியல்
குதிரை பேர குற்றச்சாட்டு
விஜய் அரசுக்கு முதல் சவால்

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume I இதழ் 9 Issue 9 ஜூன் 2026 June 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
அதிமுகவுக்கு குறி
இருதுருவ அரசியலுக்கு நகர்த்துகிறாரா விஜய்?
'தளராத தளிர்கள்'
தாம்பரம் போலீஸ் அசத்தல்
இலக்கை எட்டுவார்களா 'சிங்கப் பெண்கள்?'
விளைச்சலும் இல்லை; விலையும் இல்லை

தக்காரர் குரல்
TNBIL/25/A2396
மலர் 1 Volume I இதழ் 10 Issue 10 ஜூலை 2026 July 2026 மாத இதழ் Monthly Magazine விலை ரூ.25 Price RS.25
நெருங்கும் கழகங்கள் திசை மாறும் களம்
கூடங்குளம் தகவல் திருட்டு கேள்விக்குறியாகும் தென்னிந்திய பாதுகாப்பு
AUTOMATIC
மேனுவல் கார்களை ஆட்டோமெட்டிக்காக மாற்றும் அற்புதம்
நாடாளுமன்றத்துக்குள் திமுக - பாஜக கூட்டணி?

தக்கார் குரல்

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,** மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**
உதவி ஆசிரியர்கள்
**விஜயலட்சுமி** பின்லாந்து
**ஜோதி நரசிம்மன், S.சக்தி பாரதி**

சென்னை- நிருபர்கள்
தலைமை நிருபர் **பாலாஜி**
தலைமை புகைப்பட கலைஞர் **சதீஷ்**

மாவட்ட செய்தியாளர்கள்
சென்னை - **M.ஹர்ஷத்**
உயர் நீதிமன்றம் - **க.முகேஷ்**
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
காஞ்சிபுரம்- **கவி பாலா,**
**ராஜா** புகைப்படக்கலைஞர்
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
கொடைக்கானல் - **கணேசன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷூவல் எடிட்டர் - **E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**

வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,**
மதுரை

மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 75500 50088
செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில்
ThakkaarKural App-ஐ
டவுன்லோடு செய்யுங்கள்
இணையதள முகவரி
www.thakkaarkural.com


# நெருங்கும் கழகங்கள் திசை மாறும் களம்

கரூரில் கடந்த 10ஆம் தேதி நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் விஜய், “திமுகவும் அதிமுகவும் கூட்டுக் களவாணிகள். அவர்களுக்குள் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்றால், அதை இடைத்தேர்தலில் நிரூபிக்கட்டும்” என்றார். இந்தக் கருத்து தமிழக அரசியல் தலைகீழாக மாறப்போவதற்கான முன்னோட்டமாகும்.

2026 சட்டப்பேரவைத் தேர்தல், தமிழக அரசியலின் திசையையே மாற்றி அமைத்திருக்கிறது எனலாம். இடைத்தேர்தலில் விஜயை எதிர்கொள்ளும் வகையில் திமுக அதிமுக கட்சிகளிடையே சில உடன்பாடுகள் ஏற்படும்போல் தெரிகிறது.

தேர்தலுக்கு முன்பு இருந்த தவெக வேறு, தற்போதுள்ள தவெக வேறு என்பதை அனைத்துக் கட்சிகளும் புரிந்து கொண்டுவிட்டன. இனி, விஜயைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் திட்டத்துக்கு மதச்சார்பற்றக் கட்சிகள் வந்துவிட்டன. தமிழகத்துக்கு வெளியே இண்டியா கூட்டணியில் திமுக இடம்பெறுமா என்பதை இப்போதே சொல்லிவிட முடியாது.

ஆனால், தமிழகக் களத்தில் விஜய் தலைமையில் மதச்சார்பற்றக் கட்சிகள் ஒரு குடையின் கீழ் இணைந்துள்ளன. இந்தக் கூட்டணியை எதிர்க்கும் அணியை மதவாதக் கூட்டணி எனச் சுருக்கிவிட முடியாது. பாஜக இடம்பெற்றாலும் இடம்பெறாவிட்டாலும், அந்தக் கூட்டணிகள் விஜய் எதிர்ப்புத் கூட்டணி என்றும் அழைக்கப்படும்.

இங்குதான் களத்தில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. திமுகவும் அதிமுகவும் சில உடன்பாடுகளின் கீழ் விஜயை ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளன. காரணம், இரு கழகங்களின் இருத்தலுக்கே சவால் விடுத்துள்ளது விஜயின் அரசியல். அதற்காக இரு கழகங்களும் கூட்டணி அமைத்துவிடும் என்று கூறிவிட முடியாது. காரணம், அதைத் தொண்டர்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்.

வேறு எப்படி?

அதாவது, இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிகளில், சிலவற்றில் திமுகவும், சிலவற்றில் அதிமுகவும் களமிறங்கலாம். அந்தத் தொகுதிகளில், இரு கழகங்களின் தொண்டர்களும் இணைந்து விஜய்க்கு எதிராக வாக்களிக்கலாம். இந்த அடிப்படையில் ஓர் உடன்பாடு எட்டப்படலாம் என்று தோன்றுகிறது.

இதைத் தொண்டர்கள் ஏற்பார்களா? இதற்கு முன்பு நடந்த








பல்வேறு இடைத்தேர்தல்களில் ஆளும் கழகக் கட்சியே வெற்றி வாகை சூடுவது வழக்கம். பெரிய வாக்கு வித்தியாசத்தில் அவை வெற்றிபெறும்போது அதில் பிரதான எதிர்க்கட்சி கழகத்தின் வாக்கும் சேர்ந்தே இருக்கும். இதன்மூலம், இரு கழகங்களின் தொண்டர்களுக்கிடையே சில கொடுக்கல் வாங்கல்கள் இருந்து கொண்டுதான் வந்துள்ளன.

உதாரணமாக, இரு கழகங்களும் தங்களின் ஆட்சிக்காலத்தில் அரசின் டெண்டர்களை இறுதி செய்யும்போது, பிரதான எதிர்க்கட்சிக்கும் சில வாய்ப்புகளை விட்டுத்தருவது வழக்கம். இது இரு கழகங்களுக்கும் இடையே இருந்து வந்திருக்கும் பழக்கம்தான்.

இம்முறை இடைத்தேர்தல் களத்திலேயே அத்தகைய விட்டுக்கொடுக்கும் அரசியலுக்குள் (Adjustment Politics) கழகங்கள் நுழைகின்றன. காரணம், இரு கழகங்களுக்குமே இது இருத்தலுக்கான சவால் என்பதுதான்.

இதைத்தான் அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரனின் கூற்று வெளிப்படுத்துகிறது. மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் சூழல் யாரை வேண்டுமானாலும் ஒன்றிணைக்கும். அண்ணா – ராஜாஜி ஒன்று சேர்ந்துள்ளனர். திமுக கூட்டணியில் இடம்பெற்றவர்கள் தவெக அரசில் அங்கம் வகிப்பது நியாயம் என்றால், எந்தக் கூட்டணியும் நியாயம்தான் என்று தெரிவித்தார்.

இரு கழகங்களும் ஏன் வெளிப்படையாக





இணைந்து செயல்படக் கூடாது? ஆம், அப்படி செயல்படக் கூடாது. அப்படிச் செய்தால் அது இருவருக்குமே பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். இதை இரு கழகங்களின் பாரம்பரிய வாக்காளர்களால் ஜீரணிக்க முடியாது. இருவரும் ஒரே அணியில் இடம்பெற முடியாது. ஆனால், விட்டுக்கொடுக்கும் அரசியல் அந்த அளவுக்குப் பாதிப்பைத் தராது எனக் கழகங்கள் கருதுகின்றன.

அதுவும் இந்த இடைத்தேர்தலில் விஜய் மூன்று மடங்கு பலத்துடன் நிற்கிறார். இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிகளில், அவர் வாங்கிய இயல்பான வாக்குகளோடு, அதிமுகவிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தவர்களின் தனிப்பட்ட செல்வாக்கும், திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த கட்சிகளின் ஓட்டுகளும் விஜய்க்கு இடம்மாறும். இது தவெகவுக்கு அசுர பலத்தைக் கொடுக்கும். கூடவே ஆளுங்கட்சிக்கு வாக்களிக்கும் வாக்காளர்களின் வழமையான மனநிலையும் வெற்றியை உறுதி செய்யும்.

இந்தச் சூழலைக் கழகங்கள் தனித்து எதிர்கொள்வது அரசியல் தற்கொலைக்குச் சமமாகும். எனவே, இதற்கு ஒரு தீர்வு காணும் வகையில், இரு கழகங்களும் ஒரு புள்ளியில் இணையக் காத்திருக்கின்றன.

ஆக, விஜய் எதிர்ப்பு அரசியலுக்குள் கழகங்கள் நுழைகின்றன. இனி, இதுதான் கழகங்களின் எதிர்கால திசைவழியாக இருக்கக்கூடும்.



# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் ரகசிய ஆவணங்கள் திருட்டு

## அதிர்ச்சியளித்த ஹேக்கர்கள்

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் ரகசிய ஆவணங்கள் கசிந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் கூட்டு முயற்சியுடன் உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டின் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் உள்கட்டமைப்பு மற்றும் சப்ளையர்கள் தொடர்பான ஆயிரக்கணக்கான ரகசிய ஆவணங்கள் டார்க் வெப்பில் கசிந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய அணுமின் நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் அமைந்துள்ளது. ரஷ்ய வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட நீர் அழுத்த அணு உலைகளில் மொத்தமாக 7 அணு உலைகள்



**கூடங்குளம் அணுமின் நிலையம் என்பது தென்னிந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடையது. அதில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் இணைய திருட்டு, தென்னிந்தியாவின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக முடியும் ஆபத்தும் உள்ளது. மத்திய புலனாய்வு அமைப்புகளும், இந்திய பொறியாளர்களும் விரைந்து செயல்பட வேண்டிய தருணம் இது.**

செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அணு உலையும் தலா 1000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை.

அணுமின் நிலையத்தின் வரைபடங்கள், விநியோகஸ்தர்களின் விவரங்கள் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய ரகசியக் கோப்புகளை வேர்ல்ட் லீக்ஸ் என்ற தரவுத் திருட்டுக் கும்பல் (Ransomware group டார்க் வெப்) இணையத்தில் கசியவிட்டுள்ளது. இந்தத் தரவுகள் தொழிலதிபரான அனில் அம்பானிக்குத் தொடர்புடையது எனக் கூறப்படுகிறது.

வேர்ல்ட் லீக்ஸ் இணையதளத்தில் கசியவிடப்பட்டுள்ள 8,58,000 ரிலையன்ஸ் கோப்புகளில் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்குச் சொந்தமான 19,000 ரகசியக் கோப்புகளும் உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது. 14.3 ஜிகாபைட் அளவுள்ள 19,000 கோப்புகள், ஜூன் 11ஆம் தேதி முதல் இணையத்தில் கசிந்துள்ளன.

அந்தக் கோப்புகள் 2016 முதல் 2025 ஆம் ஆண்டுக்கு இடையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவையாகும்.

அந்தக் கோப்புகளில், காற்று வெளியேற்றம், குளிரூட்டும் அமைப்பு, பொது கட்டுப்பாட்டு அறைக்கான லே அவுட்கள், தீவிரவாதிகளின் தாக்குதல் நடத்தப்பட்டால் 112 மில்லியன் அமெரிக்க டாலர் காப்பீடு பாலிசிகள், கருவிகள் பரிசோதனை விவரம், விநியோகஸ்தர்களின் பட்டியல், மின்நிலைய பொருள்களின் புகைப்படங்கள், அணுசக்தி கழகம் மற்றும் ரிலையன்ஸ் இணைந்து நடத்தவிருந்த ஆய்வு குறித்த 2024 ஆம் ஆண்டு கூட்டத்தின் பதிவுகள் ஆகியன இருந்ததாகக் கூறப்படுகிறது.

அதேநேரம், வேர்ல்ட் லீக்ஸ் திருட்டுக் கும்பல் வெளியிட்டிருக்கும் ஆவணங்கள், அணு உலைகளின் மைய அமைப்புடன் தொடர்புடையதாகத் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

ரிலையன்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனங்களில் ஒன்றான ரிலையன்ஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், அணுமின் நிலையத்தின் யூனிட் 3 மற்றும் யூனிட் 4க்கான கட்டமைப்பை வடிவமைப்பதற்கான ஒப்பந்தத்தை 2018ல் பெற்றிருந்தது. இதன் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் சூழலில் 2027 ஆம் ஆண்டுக்குள் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ஆவணக் கசிவு நடந்துள்ளது.

இதுகுறித்து ரிலையன்ஸ் குழுமம், யோட்டா எனும் மூன்றாம் தர இந்திய தரவு மையத்தின் சர்வரிலிருந்து தரவுகள் கசிந்திருக்கிறது. இதுதொடர்பாக அரசுக்குத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளது.

அதேநேரம், யோட்டா நிறுவனம், தாங்கள் பராமரிக்கும் சர்வர் ஒன்றில் மே 29 அன்று சந்தேகத்திற்கிடமான செயல்பாட்டைக் கண்டறிந்தோம். அந்தச் செயல்பாடு உடனடியாக நிறுத்தப்பட்டதுடன், சந்தேகத்திற்குரிய ரான்சம்வேர் இயக்கம் தடுக்கப்பட்டது என தெரிவித்துள்ளது.



இதற்கு முன்பு, நைக் மற்றும் டாடா நிறுவனத்திடம் தங்கள் கைவரிசையைக் காட்டிய வேர்ல்ட் லீக்ஸ் எனும் தரவுத் திருட்டுக் கும்பல், நைக், டாடா கம்பெனிகளின் தரவுகளை லீக் செய்துவிடப் போவதாக மிரட்டி 15 லட்சம் அமெரிக்க டாலர்கள் பிணைத்தொகையை கேட்டது.

அதைத் தர டாடா நிறுவனம் மறுத்ததால், ஆப்பிள், டெஸ்லா நிறுவனங்களுக்கு உதிரிபாகங்கள் தயாரித்து தருவது தொடர்பான தரவுகளை இணையத்தில் கசியவிட்டது வேர்ல்ட் லீக்ஸ்.

இந்திய அணுசக்தி கழகம் மற்றும் மத்திய அரசின் முதன்மை இணையப் பாதுகாப்புக் குழுவினர் ஹேக்கிங் சம்பவம் குறித்து ரிலையன்ஸ் நிறுவனத்துடன் ஆலோசித்தனர். இதுதொடர்பாக விசாரணையும் நடைபெற்று வருகின்றது.

இதற்கு முன்பு 2019 ஆம் ஆண்டில், வட கொரிய ஹேக்கர்கள் கூடங்குளம் தரவுகளைத் திருடியது குறிப்பிடத்தக்கது. கூடங்குளம் அணுமின் நிலையம் என்பது தென்னிந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடையது. அதில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் இணைய திருட்டு, தென்னிந்தியாவின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக முடியும் ஆபத்தும் உள்ளது. மத்திய புலனாய்வு அமைப்புகளும், இந்திய பொறியாளர்களும் விரைந்து செயல்பட வேண்டிய தருணம் இது.

# தொகுதி மறுவரையறை மசோதாவை திமுக ஆதரிக்குமா?



## வாய்ப்பிருக்கிறது என்கிறார் மத்திய அமைச்சர்

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே, சென்னையில் சமூக நீதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: அவர், "நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா, தொகுதி மறுவரையறை மசோதா கொண்டுவரப்படும்.

கடந்த முறை இந்த மசோதா நிறைவேற்ற முடியாமல் போனதற்கு முக்கிய காரணம் காங்கிரஸ்தான். இந்த முறை என்டிஏவின் பலம் அதிகரித்துள்ளது. மேலும், தமிழகத்தில் தற்போது திமுக காங்கிரஸ் கட்சிகள் இடையே மோதல் நிலவுகிறது, மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸைச் சேர்ந்த 20 எம்.பி.க்கள் என்டிஏவுக்கு ஆதரவளித்துள்ளார்கள். நிச்சயமாக இந்த முறை இந்த மசோதாக்கள் நிறைவேற்றப்படும்.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய்க்கு பெரும்பான்மை கிடைக்காதபோது அதிமுக தலைமையிலான கூட்டணியிடம் ஆதரவு கேட்பார் என நினைத்தோம். ஆனால் அவர் சிறுசிறு கட்சிகளை ஒன்று சேர்த்து ஆட்சி அமைத்துள்ளார்.

தற்போது திமுக-காங்கிரஸ் ஒன்றாக இல்லை. இண்டி கூட்டணியை விட்டு திமுக வெளியேறிவிட்டது. ஆகையால் காங்கிரஸின் முடிவுகளுக்கு திமுக ஒத்துழைப்பு தராது என நம்புகிறேன். இந்த மசோதாவுக்கு ஆதரவு தருவது தொடர்பாக பாஜக தலைவர்கள், திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். திமுக இந்த மசோதாவுக்கு ஆதரவு தரலாம். அல்லது, மசோதாவை புறக்கணிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதேநேரம், நாடாளுமன்றத்தில் மத்திய அரசு கொண்டு வரப்போகும், தொகுதி மறுவரையறை உள்ளிட்ட மசோதாக்களை தோற்கடிக்க காங்கிரஸ் முயற்சி மேற்கொண்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்க காங்கிரஸ் முயன்று வருகிறது. இதுகுறித்து இண்டியா கூட்டணி கட்சிகளுடன் அது பேசிவருகிறது. இண்டியா கூட்டணியில் தற்போது இல்லாத ஆம் ஆத்மி மற்றும் திமுக கட்சிகளுடனும் பேசிவருவதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

எனினும், காங்கிரஸுடன் இணைந்து செயல்பட வேண்டாம் என்று திமுக எம்.பி.க்களுக்கு அதன் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியிருப்பதாகவே செய்திகள் வருகின்றன. அதன்படி பார்த்தால், நாடாளுமன்றத்துக்குள் பாஜக - திமுக கட்சிகள் நெருங்கி வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மசோதாக்களுக்கு ஆதரவு பெறுவது தொடர்பாக திமுக எம்.பி.க்கள் கனிமொழி மற்றும் திருச்சி சிவா ஆகியோருடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசியதாகவும் கூறப்படுகிறது.



பாஜகவின் மிக முக்கிய மசோதாவுக்கு திமுக ஆதரவும் தரக்கூடும் என்ற செய்தி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. பாஜகவை நோக்கி திமுக நகர்வதாக அரசியல் நோக்கர்கள் சிலர் தெரிவித்தாலும், இது நாடாளுமன்ற அளவில் மட்டுமே சாத்தியம், கூட்டணியாக உருவெடுக்க வாய்ப்பில்லை என்றும் சொல்கிறார்கள்.

# முஸ்லிம் மதத்துக்கு மாறினால் BC சாதிச் சான்று பெற முடியாது

## அரசாணையை ரத்து செய்தது உயர் நீதிமன்றம்



இந்து மதத்தை சேர்ந்த நாராயணன் கோமதியம்மாள் என்ற தம்பதியின் மகனான பரமசிவம், இஸ்லாம் மதத்தை தழுவி தனது பெயரை சமீர் அகமது என மாற்றிக் கொண்டார். அதை ஏற்று கயத்தாறு சுன்னத் ஜமாத் அமைப்பு 2015ஆம் ஆண்டு சான்று வழங்கியது. பின்னர் அரசிதழிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மதம் மாறிய அவர் இஸ்லாமிய சடங்குகள் மற்றும் வழக்கப்படி வஹிதா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2 குழந்தைகள் உள்ளனர்.

மதம் மாறியதை தொடர்ந்து, தனக்கு முஸ்லிம் லெப்பை பிரிவை சேர்ந்தவர் என பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர் என சாதி சான்று வழங்கக் கோரி அவர் விண்ணப்பித்தார். அந்த மனுவை கயத்தாறு வட்டாட்சியர் நிராகரித்தார். பின்னர் சாதி சான்று வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனுவும் நிராகரிக்கப்பட்டது.

தனக்கு முஸ்லிம் லெப்பை பிரிவை சேர்ந்தவர் என சான்று வழங்கக் கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில், சமீர் அகமது வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் மற்றும் பி.பி.பாலாஜி ஆகியோர் பிறப்பித்த உத்தரவு விவரம்:

இந்து மதம்போல அல்லாமல் தங்களது மதங்கள் சமூக சமத்துவத்தை அளிப்பதாக கிறிஸ்தவ மிஷனரிகளும், முஸ்லிம் பிரச்சாரகர்களும் கூறி வருகின்றனர். மதமாற்றத்தை ஊக்குவிக்கும் இத்தகைய நிலைப்பாடு இருக்கும்போது, முஸ்லிம் மதத்திலும் படிநிலை அமைப்பு உள்ளது என்பது நேர்மையற்றது. முஸ்லிம் மதத்தில் சில பிரிவுகளை ‘பிற்படுத்தப்பட்டவை’ என்றும், மற்றவற்றை ‘முன்னேறியவை’ என்றும் வகைப்படுத்துவது குர்ஆனின் கட்டளைகளுக்கு முரணானது. இஸ்லாம் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவே விழைகிறது. இறைவனின் பார்வையில் அனைவரும் சமம்.




**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சாதியினர் உள்ளிட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இஸ்லாமுக்கு மதம் மாறினால், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் சமூகச் சான்றிதழ் வழங்கலாம் என 2024ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் தமிழக அரசு வெளியிட்ட அரசாணை என்பது, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புகளுக்கு முரணானது; நீதிமன்றத் தீர்ப்புகளை நிர்வாக உத்தரவுகள் மூலம் மாற்ற முடியாது;**

அங்கு சமூகப் படிநிலைகள் ஏதும் இல்லை. வில், ஒருவர் இஸ்லாமுக்கு மதம் மாறியவுடன் அவர் ஒரு முஸ்லிமாக மட்டுமே கருதப்படுவார்.

லெப்பை, ராவுத்தர், மரக்காயர், ஷேக், சையத் போன்ற குறிப்பிட்ட முஸ்லிம் சமூகங்களின் உறுப்பினராக மதமாற்றத்தின் மூலம் ஆக முடியாது; அவ்வாறு மதம் மாறிய பின்னர், இட ஒதுக்கீட்டு சலுகைகளை தொடர்ந்து கோரும்போது, அதன் நியாயம் மற்றும் சட்டப்பூர்வ தன்மை குறித்த மற்றொரு விவாதத்திற்கு அது வழிவகுக்கிறது. மதமாற்றத்தின் மூலம் குறிப்பிட்ட சமூக அடையாளத்தைப் பெற முடியாது; லெப்பாய், ராவுத்தர் போன்ற சமூகங்கள் பிறப்பின் அடிப்படையில் உருவாகியவை;

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சாதியினர் உள்ளிட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இஸ்லாமுக்கு மதம் மாறினால், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் சமூகச் சான்றிதழ் வழங்கலாம் என 2024ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் தமிழக அரசு வெளியிட்ட அரசாணை என்பது, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புகளுக்கு முரணானது; நீதிமன்றத் தீர்ப்புகளை நிர்வாக உத்தரவுகள் மூலம் மாற்ற முடியாது;

சென்னை உயர் நீதிமன்றம் 75 ஆண்டுகளுக்கு முன்பு பிறப்பித்த உத்தரவில், ‘முஸ்லிம் மதத்துக்கு மாறியவுடன் ஒருவர் முஸ்லிம் ஆகிறார்’ என்று கூறப்பட்டுள்ளது. அவரை ஒரு குறிப்பிட்ட பிரிவுக்குள் அடக்க முடியாது. இந்த உத்தரவு அமலில் இருக்கும்போது, வெறும் அரசாணையால் நீதிமன்ற உத்தரவை மாற்றியமைக்க முடியாது. சட்டம் நிறைவேற்ற சட்டப்பேரவைக்கு அதிகாரம், தகுதி இருந்தாலும் அரசு நிர்வாகத்துக்கு அத்தகைய உரிமை இல்லை.

மனுதாரருக்கு “முஸ்லிம் லெப்பாய்” சமூகச் சான்றிதழ் வழங்க உத்தரவிட முடியாது; இஸ்லாம் மதத்துக்கு மாறிய ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் என்ற தகுதியைக் கோர முடியாது; முஸ்லிம் என்று மட்டுமே கருத முடியும்; உரிமை கோர வழிவகுக்கும் 2024ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசாணையும் ரத்து செய்யப்படுகிறது என உத்தரவிட்டனர்.

அரசாணை ரத்து செய்யப்பட்ட உத்தரவை எதிர்த்துதமிழக அரசுதரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

# கட்டப்பஞ்சாயத்தில் பறிபோன ஆடுகள் மீட்பு



## மார்க்சிஸ்ட் கட்சி தலையீட்டால் பழங்குடி குடும்பத்திற்கு விடிவு!



ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் அருகே விபத்து இழப்பீடு கேட்டு பழங்குடி இருளர் குடும்பம் மிரட்டப்பட்டு, அவர்களது வாழ்வாதாரமாக இருந்த ஆடுகளை கட்டப்பஞ்சாயத்து மூலம் பறித்து சென்றவர்களிடமிருந்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஎம்) மற்றும் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் தலையீட்டால் ரூ.30 ஆயிரம் ரொக்கம் மீட்கப்பட்டு உரிய குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

சோளிங்கர் வட்டம் ஐபேடு பகுதியில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருபவர் பழங்குடி இருளர் சமூகத்தைச் சேர்ந்த வடிவேலு. இவரது மகன் மணி, கடந்த ஜூன் 21ம் தேதி இரவு தனது பெற்றோரை பார்த்துவிட்டு பரவத்தூரில் உள்ள தனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் திரும்பியபோது விபத்தில் சிக்கினார். இதில் காயமடைந்த அவர் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த விபத்தை காரணம் காட்டி, ஜூன் 27ம் தேதி அப்பகுதியைச் சேர்ந்த சிலர் வடிவேலுவின் குடும்பத்தினரை அழைத்து கட்டப்பஞ்சாயத்து செய்து, பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். மேலும், அடுத்த நாளே (ஜூன் 28) அவர்களது வீட்டிற்கு சென்று, அக்குடும்பத்தின் வாழ்வாதாரமாக இருந்த 7 ஆடுகளை வலுக்கட்டாயமாகப் பறித்து ஓட்டிச் சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் இதுகுறித்து தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்திற்குத் தகவல் கொடுத்தனர். இதையடுத்து, சங்கத்தின் மாநில செயலாளர் இரா.சரவணன், சிபிஎம் தாலுகா செயலாளர் ஆர்.வெங்கடேசன், மாவட்ட குழு உறுப்பினர் ஏபிஎம். சீனிவாசன், மலைவாழ் மக்கள் சங்க மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன் மற்றும் ஜெயமாலினி ஆகியோர் நேரில் சென்று பாதிக்கப்பட்ட அக்குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, விவரங்களைச் சேகரித்தனர்.

தொடர்ந்து, ஜூன் 30ம் தேதி சோளிங்கர் காவல் நிலையத்தில் சிபிஎம் தாலுகா செயலாளர் ஆர்.வெங்கடேசன் தலைமையில் புகார் மனு அளிக்கப்பட்டது. அப்போது, அங்கு பணியில் இருந்த உதவி ஆய்வாளர் முனீர் பாஷா, புகார் அளிக்க வந்த பழங்குடி மக்களிடம் மிகவும் கடுமையாகவும் அலட்சியமாகவும் நடந்து கொண்டதாக கூறப்படுகிறது

உதவி ஆய்வாளரின் இந்த அணுகுமுறையைக் கண்டித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், உடனடியாக காவல் ஆய்வாளர் ராமச்சந்திரனிடம் இதுகுறித்து புகார் அளித்தனர்.

புகாரின் தீவிரத்தை உணர்ந்து கொண்ட காவல் ஆய்வாளர் ராமச்சந்திரன், உடனடியாக இருளர் இன மக்களை தனது வாகனத்திலேயே ஏற்றிச் கொண்டு ஐபேடு பகுதிக்கு நேரில் சென்றார். அங்கு கட்டப்பஞ்சாயத்தில் ஈடுபட்டு ஆடுகளைப் பறித்துச் சென்றவர்களிடம் தீவிர விசாரணை நடத்தினார்.

விசாரணையின் முடிவில், ஆடுகளை விற்ற தொகையான ரூ.30 ஆயிரத்தை முழுமையாக மீட்டு, பாதிக்கப்பட்ட வடிவேலுவின் குடும்பத்தினரிடம் காவல்துறையினர் ஒப்படைத்தனர். எளிய பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்க முயன்ற கட்டப்பஞ்சாயத்து கும்பலுக்கு எதிராகவும், காவல் துறையின் அலட்சியப் போக்கிற்கு எதிராகவும் உடனடியாக களமிறங்கி நீதியை பெற்றுத் தந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மலைவாழ் மக்கள் சங்கத்தின் இந்த நடவடிக்கை அப்பகுதி மக்களிடையே பாராட்டுதலைப் பெற்றது.

**கார்த்தி**

# அதிமுக எம்எல்ஏக்கள் தவெக.வுக்குத் தாவியது நியாயமா?



**சேரல் இளஞ்செழியன்,** மூத்தபத்திரிகையாளர்

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு படிப்படியாக பரவலாக ஜனநாயக விரோத செயல்களும் பொது வாழ்க்கையில் ஈடுபடுவோரிடம் ஊழல் செயல்பாடுகளும் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். அண்மையில் அதிமுக எம்எல்ஏக்கள் 6 பேர் தவெக.வுக்கு மாறியது சுயநல அரசியலின் உச்சம் எனலாம்.!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முன் எப்போதும் இல்லாதபடிக்கு கீழ்த்தரமான குதிரை பேர அரசியல் பேரங்கள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தக் குற்றச்சாட்டைத் திமுக, அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாது ஆளுங்கட்சியாக உள்ள தவெக.வுமே கூறியது குறிப்பிடத்தக்கது.

விஜய்க்கு ஆட்சி அமைக்கக் கூடுதலாக 10 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்பட்ட நிலையில், காங்கிரஸ் கட்சி ஆதரவுக்கரம் நீட்டியதோடு, அமைச்சரவையிலும் சேர்ந்தது. காங்கிரஸ் கட்சி தவிர விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும் ஆதரவு கொடுத்து அமைச்சரவையில் இணைந்தன. கம்யூனிஸ்டு கட்சிகள் இரண்டும் வெளியில் இருந்து ஆதரவு தருவதாக தெரிவித்தன. இந்த கட்சிகள் அனைத்துமே பாஜக பின் வழியாக உள்ளே வந்துவிடக்கூடாது என்பதால் இந்த நிலைப்பாட்டை எடுத்ததாக தெரிவித்தன.

காங்கிரஸ் கட்சி விஜய்க்கு ஆதரவு கொடுத்ததற்கு திமுக தரப்பில் இருந்து கடும் விமர்சனங்கள் எழுந்தன. இது கூட்டணி தர்மத்திற்கு எதிரானது மட்டுமல்ல துரோகச் செயல் என்றும் திமுக குற்றச்சாட்டியது.

அதற்கு காங்கிரஸ் தரப்பில் இருந்து "நீங்கள் பாஜகவுடன் ரகசிய தொடர்பில் இருந்து அதிமுகவுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்ததால்தான் நாங்கள் இந்த முடிவு எடுத்தோம்" என்று பதில் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, அரசியல் அவலங்களின் அரங்கமாக தமிழகம் மாறிப்போனது. டிடிவி தினகரனின் நம்பிக்கைக்குரிய ஆதரவாளரும் மன்னார்குடி சட்டமன்றத்தில் அமுமுக சார்பில் வெற்றி பெற்றவருமான எஸ்.காமராஜ் அந்தர் பல்டி அடித்து தவெக ஆதரவாளராக மாறினார். டிடிவி தினகரனால் இதை நம்பவே முடியவில்லை. காமராஜ் கொடுத்த ஆதரவுக் கடிதம் போலி ஆவணம் என்றார். சட்டமன்றத்தில் காமராஜ் நேரடியாக ஆதரவு தெரிவித்ததும், மிகப்பெரிய குதிரை பேரம் நடந்துள்ளது இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தொடர்ந்து, மரகதம் குமாரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்), எஸ்.ஜெயக்குமார் (பெருந்துறை) மற்றும் இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகியோர் ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனைகள் கூட தோற்கும் அளவுக்குத் தாவி விஜய் கட்சியில் சேர்ந்தனர். இன்னும் அதிர்ச்சி அளிக்கும் வகையில், அதிமுக எம்எல்ஏக்களும் முன்னாள் மந்திரிகளுமான சி.விஜயபாஸ்கர் (விராலிமலை), எம்.ஆர். விஜயபாஸ்கர் (கரூர்) இருவரும் தவெகவில் இணைந்தனர்.

இவர்கள் 6 பேருமே தங்கள் எம்எல்ஏ பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். அதிமுக சார்பில் போட்டியிட சீட் கிடைப்பதே கஷ்டம். அதைப் பெற்று கோடிக்கணக்கில் செலவு செய்து இரட்டை இலை சின்னத்தில்






வெற்றியும் பெற்று தங்கள் பிரசாரத்தின் போது அதிமுகவின் சாதனைகளை விளக்கி, முன்னாள் முதலமைச்சர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் மக்களுக்காக ஆற்றிய தொண்டுகளை எடுத்துக்கூறி வெற்றி பெற்றவர்கள் ஆவர். இந்த வெற்றி வியர்வை காயும் முன் இவர்கள் கட்சி மாறியது அரசியல் அவலத்தின் உச்சம் எனலாம்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கட்சித் தாவிய இந்த ஆறு பேர் குறித்து கருத்து தெரிவிக்கையில், பணத்துக்காகவும் அதிகாரத்தைப் பெறவுமே இப்படி மாறியுள்ளனர். இந்த செயல் மூலம் வாக்களித்த மக்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்துள்ளனர் என்றார்.

விஜய் தலைமையிலான தவெக கட்சி மற்ற தோழமை கட்சிகளின் உதவி இல்லாமலே கூடுதலாக சுமார் 10 எம்எல்ஏக்களை குறுக்கு வழியில் அடைவதற்கு ஈடுபடும் குதிரை பேரத்தின் விளைவே இந்தக் கட்சித் தாவல்கள் என்று திமுகவும் குற்றம் சாட்டியது. தங்கள் கட்சியைச் சேர்ந்த ஆஸ்டின் (நாகர்கோவில்) உள்பட 2 எம்எல்ஏக்களை இழுக்க தவெக முயற்சி செய்ததாகவும் குற்றம் சாட்டியது.

இதை மறுத்த தமிழக வெற்றிக்கழக முன்னணி நிர்வாகிகள், திமுகவைச் சேர்ந்த எம்எல்ஏவும் (கோவை தெற்கு) முன்னாள் மந்திரியுமான செந்தில் பாலாஜி மற்றும் அவருடைய தம்பியும் சேர்ந்து ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ இளையராஜாவை தவெகவை விட்டு வெளியே கொண்டு வரும் சதிச் செயலில் ஈடுபட்டதாக காவல் துறையில் புகார் செய்தனர்.

இதையடுத்து, தலைமறைவான அண்ணன் தம்பி இருவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிபந்தனை அடிப்படையில் முன்ஜாமீன் பெற்றுள்ளனர். திமுக அதிமுக எதிரும் புதிருமாக ஆட்சிசெய்த

அரை நூற்றாண்டு காலகட்டத்தில் மாறிமாறி படுதோல்விகளை இரண்டு கட்சிகளும் சந்தித்துள்ளன. ஆனாலும்கூட இதுபோன்ற கட்சித் தாவல்கள் நடைபெற்றது இல்லை.

லட்சக்கணக்கான தொண்டர்களின் கடின உழைப்பால் வலுவான கட்டமைப்பைக் கொண்ட கட்சியாக உருப்பெற்றது அதிமுக. அதனால் தான் ஜெயலலிதா, தான் மறைவதற்கு முன்பு சட்டமன்றத்தில் பேசும்போது அதிமுக இன்னும் நூறாண்டுகளுக்கு அசைக்க முடியாத மாபெரும் சக்தி கொண்டதாக திகழும் என்றார்.

தற்போது அதிமுகவின் பொதுச்செயலாளராக உள்ள எடப்பாடி பழனிச்சாமி கூட தன்னைப் போன்ற எளிய தொண்டனால் அதிமுகவில் மட்டுமே உயர் பதவிக்கு வர முடியும் என்று கூறி வருகிறார். அவர் கூற்றுப்படி, கட்சியின் தொண்டர்களும் கீழ்மட்ட நிர்வாகிகளும் நினைத்தால் கட்சித் தலைமையை மாற்றிட முடியும். வெற்றியை தேடித் தரவல்ல மக்கள் விரும்பும் தலைமையைக் கொண்டு வர முடியும்.

கட்சிக்கு உள்ளேயே இருந்து அதற்காக பாடுபடுவதுதான் எம்ஜியாருக்கும் ஜெயலலிதாவுக்கும் செலுத்தும் மரியாதையாக இருக்கும். இன்று வரை அதிமுக தொண்டர்கள் அதைத்தான் செய்து வருகிறார்கள். இதை விடுத்து ரகசிய பேரத்தில் ஈடுபட்டு கட்சித் தாவி செல்வோருக்கு தற்காலிகமாக ஏதாவது கிடைக்கலாமே தவிர, மக்கள் மத்தியில் காலத்துக்கும் கறைபடிந்த செல்லாக் காசாகத்தான் கிடப்பார்கள்.!





# மதுரையை கலக்கிய ‘ஸ்டார்மிங் ஆபரேஷன்’

## என்ன செய்யப் போகிறது ராமநாதபுரம் போலீஸ்?

மதுரை மாவட்டத்தில் ஒரே நாளில் 22 வரலாற்றுப் பதிவேடு குற்றவாளிகள் ‘ஸ்டார்மிங் ஆபரேஷன்’ மூலம் அதிரடியாகக் கைது செய்யப்பட்ட சம்பவம் தென்மாவட்டங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதோடு, மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தேவநாதன் நேரடி உத்தரவின் பேரில், மாவட்டத்தில் சட்டம்ஒழுங்கை நிலைநாட்டவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து உட்கோட்டங்களிலும் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் சப்இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர வாகன சோதனை மற்றும் ரவுடிகள் வேட்டை நடத்தப்பட்டது. இந்த சோதனையில், பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய, கொடிய ஆயுதங்களை வைத்திருந்த 22 முக்கியப் பதிவேடு குற்றவாளிகள் கூண்டோடு கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். பொதுமக்களின் அமைதிக்கு அச்சுறுத்தலாக விளங்கும் எவரும் தப்ப முடியாது என்றும், இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் தொடரும் என்றும் மதுரை மாவட்ட எஸ்.பி எச்சரித்துள்ளார்.

மதுரையின் இந்த அதிரடி நடவடிக்கையைத் தொடர்ந்து, அண்டை மாவட்டமான ராமநாதபுரத்திலும் இதுபோன்ற கடுமையான ‘ஸ்டார்மிங் ஆபரேஷன்’ எப்போது பாயும் என்ற எதிர்பார்ப்பு பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சில பகுதிகளில் சட்டவிரோதச் செயல்களும், ரவுடிகளின் நடமாட்டமும் பொதுமக்களின் நிம்மதியைக் கெடுக்கும் வகையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக இம்மாவட்டத்தில் கஞ்சா விற்பனை, கடல் குதிரை மற்றும் கடல் அட்டை கடத்தல், சட்டவிரோத மதுபான விற்பனை, சட்டத்திற்குப் புறம்பாக தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனை போன்ற சமூக விரோதச் செயல்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. மாவட்ட காவல்துறை மற்றும் கியூ பிரிவு போலீசார் அவ்வப்போது கஞ்சா கடத்தல் கும்பல்கள், கடல் குதிரை, கடல் அட்டை கடத்துபவர்கள் மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை செய்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்து, சிலரைக் கைது செய்து சிறையில் அடைத்து வந்தாலும் கூட, இந்த சட்டவிரோதத் தொழில்களுக்கு இன்னும் முழுமையாக முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை. குற்றவாளிகள் ஜாமீனில் வெளிவந்து மீண்டும் அதே தொழிலைத் தொடர்வது வேதனைக்குரிய விஷயமாக உள்ளது.

இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட சமூக ஆர்வலர்கள் கூறியதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தின் நீண்ட கடற்கரை எல்லைப் பகுதிகள் சர்வதேச கடத்தல் கும்பல்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அரிய வகை




கடல்வாழ் உயிரினங்களான கடல் குதிரைகள் மற்றும் கடல் அட்டைகள் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்டு அண்டை நாடுகளுக்குக் கடத்தப்படுவது தொடர்கதையாகிவிட்டது. இதுமட்டுமன்றி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களைக் குறிவைத்து விற்கப்படும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களின் நடமாட்டம் மாவட்டத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

குறிப்பாக இம்மாவட்டத்தில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் கஞ்சா போன்ற கொடிய போதைப் பொருட்களின் பிடியில் சிக்கி, தங்களது வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் இழந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட காவல்துறை இந்த அபாயகரமான போதைப்பொருள் கலாச்சாரத்திற்குத் தீர்வு காண வேண்டும், அதனை வேரோடு ஒழிப்பதில் முழு முனைப்பு காட்ட வேண்டும்.

போலீசார் பெயரளவில் வழக்கு பதிந்து கைது செய்வதோடு நிறுத்திவிடாமல், முழு முனைப்புடன் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினால் மட்டுமே இது போன்ற குற்றச் சம்பவங்களையும் கடத்தல்களையும் நிரந்தரமாகத் தடுக்க முடியும். கிராமப்புறங்களில் சந்துக்கடைகள் மூலம் சட்டவிரோத மதுபான விற்பனையும், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் தடை செய்யப்பட்ட ஆன்லைன் மற்றும் மூன்று நம்பர் லாட்டரி சீட்டு விற்பனையும் பகிரங்கமாக நடந்து வருகின்றன.

இத்தகைய நிழல் உலகக் குற்றங்களின் பின்னணியில் பெரும் ரவுடிப் பட்டாளமும், அவர்களுக்குப் பின்னால் அரசியல் செல்வாக்குமிக்க சில புள்ளிகளும் கைகோர்த்துச் செயல்படுவதால், மக்கள் இவர்களை எதிர்த்துக் கேள்வி கேட்கவே அஞ்சுகின்றனர். எனவே, பழைய குற்றவாளிகள் மற்றும் கடத்தல் மாஃபியா கும்பல்களுக்கு எதிராக இரக்கமற்ற முறையில் மெகா வேட்டையைத் தொடங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, அண்மையில் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மேற்கொண்ட அதிரடியான நடவடிக்கை ஒட்டுமொத்த தமிழக காவல்துறையினரையும் கவனிக்க வைத்தது. திருச்சியில் உள்ள அனைத்து ரவுடிகளையும், பழைய குற்றவாளிகளையும் ஒரே இடத்திற்கு வரவழைத்து, அவர்களுக்குக் காவல் துறை தரப்பில் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டால் குண்டாஸ் சட்டம் பாயும் என்றும், மறுவாழ்வு பெற்று வாழ நினைப்பவர்களுக்கு மட்டுமே சலுகைகள் வழங்கப்படும் என்றும் முகத்திற்கு நேராக எச்சரித்த பாணி பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இதே போன்ற உத்தியை ராமநாதபுரம் மாவட்டத்திலும் கையாள வேண்டும். அப்படியும் அடங்காதவர்கள் மீது ‘ஸ்டார்மிங் ஆபரேஷன்’ நடத்தி சிறையிலடைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழக மாநில செயலாளர் தொண்டி சாதிக் பாட்ஷா கூறும்போது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கடத்தலுக்கு இப்பகுதி கடற்கரையை சமூக விரோதிகள் பயன் படுத்துகின்றனர். தொண்டி, கீழக்கரை, ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதியில் சர்வ சாதாரணமாக போதைப் பொருள் கிடைக்கிறது. இளைஞர்கள் பெரும்பாலானோர் போதைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களை மீட்க அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும். அனைத்து பகுதியிலும் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும். சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோரை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் என்றார்.

# பழங்குடிகளுக்கு வீடுகள் கட்டியதில் முறைகேடு



## ஒப்பந்ததாரர் மீது புகார்

**பாதிக்கப்பட்ட இருளர் இன மக்களுக்கு நியாயம் கிடைக்க, மாவட்ட நிர்வாகமும், மாவட்ட ஊராட்சி முகமையும் உடனடியாக இவ்விவகாரத்தில் தலையிட வேண்டும். உரிய விசாரணை நடத்தி, தவறிழைத்த ஒப்பந்ததாரர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுப்பதோடு, மக்களின் வங்கி அட்டைகளை மீட்டுத் தர வேண்டும். மேலும், அரைகுறையாக உள்ள வீடுகளை விரைந்து முடித்து, பாதிக்கப்பட்ட மக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.**



ராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் பழங்குடியின மக்களுக்கு கட்டப்பட்ட அரசு வீடுகளில் பெரும் முறைகேடு நடந்துள்ளதாக புகார் எழுந்துள்ளது. பணிகளை முழுமையாக முடிக்காமல் ஏமாற்றியதோடு, மக்களின் வங்கி அட்டைகளையும் பறித்து வைத்துள்ள ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழ்நாடு பழங்குடி ஆன்றோர் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி வட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கரிவேடு ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் பழங்குடியின இருளர் இன மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்குத் தமிழ்நாடு அரசு சார்பில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. மேலும், மத்திய மாநில அரசுகளின் கூட்டு திட்டத்தின் கீழ் (202324 ஆம் ஆண்டு) தலா ரூ.2.40 லட்சம் மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள் கட்டும் பணியும் தொடங்கப்பட்டது.

திட்டத்தின் கீழ், ஒரு பகுதி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் முறைகேடுகள் அரங்கேறியுள்ளதாக கூறப்படுகிறது. வீட்டின் வெளிப்புற சுவர்களில் வர்ணம் பூசப்பட்டு, திட்டத்தின் பெயர் பலகையும் எழுதப்பட்டுள்ளது. இதனால் வெளியில் இருந்து பார்ப்பதற்கு வீடுகள் முழுமையாக முடிவடைந்தது போல் தோற்றமளிக்கின்றன.




வீட்டின் உட்புறத்தில் சுவர்கள் பூசப்படாமலும், தரைகள் அமைக்கப்படாமல், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏதுமின்றியும் பணிகள் அரைகுறையாகக் கைவிடப்பட்டுள்ளது.

வீடுகள் முழுமையாக முடியாத நிலையில், பணிகள் அனைத்தும் முடிந்துவிட்டதாகக் காட்டி, அதற்கான முழுத் தொகையும் பெறப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இப்பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர், பழங்குடியின மக்களின் வங்கி கணக்கு புத்தகங்கள் மற்றும் ஏடிஎம் கார்டுகளை சட்டவிரோதமாகத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார் என்றும் குற்றம்சாட்டப்படுகிறது. இதன் காரணமாக, தமிழ்நாடு அரசு வழங்கக்கூடிய 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' உள்ளிட்ட அரசின் நலத்திட்ட உதவிகள் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடையாமல், ஒப்பந்ததாரர் அதைப் பெற்றுக் கொள்வதாக பொதுமக்கள் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த தமிழ்நாடு பழங்குடி ஆன்றோர் மன்ற உறுப்பினர் இரா. சரவணன், கரிவேடு இந்திரா நகர் பகுதிக்கு நேரில் சென்று வீடுகளின் உண்மை நிலவரம் குறித்து விரிவான கள ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: வெளியில் மட்டும் வர்ணம் பூசி, முழுப் பணத்தையும் பெற்றுக் கொண்டு, உட்புறப் பணிகளைச் செய்யாமல் ஏழைப் பழங்குடியின மக்களை ஒப்பந்ததாரர் ஏமாற்றி உள்ளார். மேலும் அவர்களின் ஏடிஎம் கார்டுகளை பறித்து வைத்துள்ள செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றார்.

இதுகுறித்து மாவட்ட ஊராட்சி முகமை அலுவலரிடம் அவர் நேரில் சென்று புகார் அளித்துள்ளார். இதில் தமிழ்நாடு விவசா





யிகள் சங்க மாவட்ட செயலாளர் எல்.சி.மணி, பொருளாளர் சி.ராதாகிருஷ்ணன், ஆற்காடு தாலுகா செயலாளர் மோகன்ராஜ், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பாதிக்கப்பட்ட இருளர் இன மக்களுக்கு நியாயம் கிடைக்க, மாவட்ட நிர்வாகமும், மாவட்ட ஊராட்சி முகமையும் உடனடியாக இவ்விவகாரத்தில் தலையிட வேண்டும். உரிய விசாரணை நடத்தி, தவறிழைத்த ஒப்பந்ததாரர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுப்பதோடு, மக்களின் வங்கி அட்டைகளை மீட்டுத் தர வேண்டும். மேலும், அரைகுறையாக உள்ள வீடுகளை விரைந்து முடித்து, பாதிக்கப்பட்ட மக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

கழகம் பதிப்பகம் சார்பில் கடந்த 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை வடபழனியில் நடந்த விழாவில், "தமிழ் தேசிய தலைவர் தமிழரசனின் வாழ்வும், அறமும்" என்ற தலைப்பிலான புத்தகம் வெளியிடப்பட்டது. அந்த புத்தகத்தில், 1967ஆம் ஆண்டில் தமிழரசன் பேசிய 'தமிழகம் தனி நாடாக வேண்டும்' என்ற தலைப்பிலான பேச்சும், 'பிரிவினைக்காக கொரில்லா போர் முறை கையாளப்பட வேண்டும்' என்ற பதிவும் இடம்பெற்றன.

இந்த உள்ளடக்கங்களை அடிப்படையாக கொண்டு, புத்தகத்தை வெளியிட்ட கழகம் பதிப்பகத்தை நடத்திய இளங்கோவன், சென்னை கே.கே.நகரை சேர்ந்த கீரா, சாலிகிராமத்தை சேர்ந்த தமிழ் பாலா ஆகியோர் மீது காவல்துறையினர் தேசத் துரோக சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

சென்னை சைதாப்பேட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவை இருந்த காலத்தில் இளங்கோவன் இறந்துவிட்ட நிலையில், தங்களுக்கு எதிரான வழக்கை ரத்து செய்யக் கோரி, கீரா மற்றும் தமிழ் பாலா ஆகிய இருவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி பிறப்பித்த உத்தரவில், "அரசியலமைப்பு சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக வெறுப்பு, அவமதிப்பு, அதிருப்தியை ஏற்படுத்தும் செயல்பாடுகளையே தேசத் துரோக சட்டத்தின் சாராம்சமாக கருத வேண்டும்; அத்தகைய குற்றச்சாட்டுகளை, இன்றைய சமூகச் சூழலுக்கு ஏற்பவே அணுக வேண்டும்; கடந்த 1967ல் தமிழரசன், தமிழ் விடுதலை படையை உருவாக்கியபோது, அத்தகைய பேச்சு அல்லது வெளியீடு, இந்திய அரசாங்கத்திற்கு எதிராக வெறுப்பையோ அல்லது அவமதிப்பையோ ஏற்படுத்தியிருக்கலாம் என்பது உண்மைதான்; ஆனால் இன்றைய இந்தியா இதயங்களாலும், ஆன்மாக்களினாலும் ஒருங்கிணைந்து இருக்கும் நிலையில், தனி தமிழ்நாடு கோரிக்கையை தேசத் துரோகமாக பார்க்க முடியாது; மாறாக அந்த கோரிக்கையை முன்வைப்பவர்கள் மனநல பாதிப்பு உடையவர்களாகவே பார்க்கப்படுவார்களே தவிர, பொது மக்களிடையே எந்த விதமான வெறுப்பையும் ஏற்படுத்தாது" என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை பதிவு செய்வது வெறுப்பை விதைப்பது ஆகாது என்பதை தெளிவுபடுத்தியுள்ள நீதிபதி, அந்த புத்தகத்தில் தற்காலத்தில் பிரிவினைக்கான அழைப்பு எதுவும் இல்லை என்பதாலும், பல தசாப்தங்களுக்கு முன் தமிழரசன் பேசியதை பதிவு செய்வது வெறுப்பைத் தூண்டும் முயற்சியாகாது என்பதாலும், கீரா மற்றும் தமிழ் பாலா ஆகியோருக்கு எதிரான தேசத் துரோக வழக்கை ரத்து செய்வதாக உத்தரவிட்டுள்ளார்.



நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி



# தனித் தமிழ்நாடு கோரிக்கை மனநல பாதிப்பின் விளைவு

## உயர்நீதிமன்றம் கருத்து

**க.முகேஷ்,** சென்னை

# போலீஸுக்கே விளையாட்டுக் காட்டிய கபடி கோச்




**ஏற்கனவே தாயை இழந்து தந்தை மற்றும் பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்து வரும் அந்த சிறுமி, கபடி பயிற்சியாளர் ராஜியின் இந்த செயலால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி, விருப்பப்பட்டு சேர்ந்த கபடி பயிற்சிக்கு செல்லாமல் புறக்கணித்து வந்தார். இதுகுறித்து தனது தந்தையிடம் கூறினால் பிரச்சினை பெரிதாகிவிடும் என்று பயந்து தனது பாட்டியிடம் கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து சிறுமியின் பாட்டி செம்மஞ்சேரி மகளிர் காவல் நிலையத்தில் பயிற்சியாளர் ராஜி மீது புகார் அளித்துள்ளார்.**

சென்னை மாநகரின் ஆற்றோரம் வசித்த மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு OMR சாலையை ஒட்டிய பகுதியில் அடுக்கு மாடி கட்டிடங்கள் கட்டி அங்கே குடியமர்த்தப்பட்டனர். அப்பகுதியில் வசிக்கும் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருந்தாலும், அங்குள்ள குழந்தைகள் விளையாட்டுப் போட்டிகளில் ஒரு படி மேலே நிற்கிறார்கள். அதிலும் கபடி போட்டிகளில் தமிழ்நாட்டின் சிறந்த கபடி வீராங்கனைகளாக புகழ்பெற்று விளங்கும் சிறுமிகள் அடங்கிய கபடி குழு ஒன்று கண்ணகி நகரில் பயிற்சி பெற்று வருகிறது.

சிறுமிகள் கபடி குழுவின் பயிற்சியாளரான ராஜி என்பவர், அவரிடம் பயிற்சி பெற்றுவரும் மாணவிகளை நன்றாக ஊக்கப்படுத்தி அவர்களை முன்னேற்றி வருகிறார். இந்த கபடி குழுவில் விளையாடும் வீராங்கனைகள் ஆசியப் போட்டிகள் வரை சென்று தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது. இதனாலேயே கபடி என்றால் கண்ணகி நகர் தான் என்று புகழ்பெற்று வருகிறது அந்தப் பகுதி.

இந்நிலையில் இங்கு பயிற்சி பெறும் சிறுமிகளின் பயிற்சியாளர் ராஜி கடந்த மாதம் அங்கு பயிற்சி பெறும் 16 வயது சிறுமி ஒருவரிடம் பாலியல் ரீதியாக 3 முறை தொந்தரவு கொடுத்ததாக புகார் எழுந்துள்ளது. மேலும் தன் விருப்பத்திற்கு இணங்கினால் மட்டும்தான் முன்னேற முடியும் என்று கூறி தன் ஆசைக்கு இணங்க சிறுமியை வலியுறுத்தி உள்ளார்.

ஏற்கனவே தாயை இழந்து தந்தை மற்றும் பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்து வரும் அந்த சிறுமி, கபடி பயிற்சியாளர் ராஜியின் இந்த செயலால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி, விருப்பப்பட்டு சேர்ந்த கபடி பயிற்சிக்கு செல்லாமல் புறக்கணித்து வந்தார்.

இதுகுறித்து தனது தந்தையிடம் கூறினால் பிரச்சினை பெரிதாகிவிடும் என்று பயந்து தனது பாட்டியிடம் கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து







சிறுமியின் பாட்டி செம்மஞ்சேரி மகளிர் காவல் நிலையத்தில் பயிற்சியாளர் ராஜி மீது புகார் அளித்துள்ளார்.

ஆனால் செம்மஞ்சேரி மகளிர் காவல் நிலையத்தில் அந்த புகாரின் மீது 3 தினங்களுக்கு பிறகுதான் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் அந்த சிறுமி புகார் அளித்த உடன் ராஜியின் உறவினர்கள் சிறுமி வீட்டாரிடம் சமாதானம் பேசியுள்ளனர்.

சமீபத்தில் தங்கம் வென்ற கபடி வீராங்கனையின் தாயார் சில மாதங்களுக்கு முன்பு, பயிற்சியாளர் ராஜி மீது கண்ணகி நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். தன் மகளின் வங்கி கணக்கில் இருந்து பல லட்சங்களை எடுத்துக் கொண்டதாகவும், மகளின் மனதை மயக்கி தன்னிடம் சேரவிடாமல் தனியாக பிரித்து விட்டதாகவும் பயிற்சியாளர் ராஜி மீது அவர் புகார் அளித்துள்ளார். அந்த புகார் இன்னும் விசாரணை கட்டத்திலேயே உள்ளது. நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. இதையடுத்து அவர் சோழிங்கநல்லூர் போலீஸ் ஆணையர் அலுவலகத்திலும் புகார் அளித்துள்ளார்.

இந்த இரு புகார்கள் மீதும் போலீஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வலியுறுத்தியுள்ளன. பயிற்சியாளர் ராஜியை போலீஸார் கைது செய்து விசாரித்தால்தான் அனைத்து உண்மைகளும் தெரியவரும் என அவர்கள் கூறினர். இதற்கிடையே, தலைமறைவாக இருந்த கபடி பயிற்சியாளர் கொடைக்கானல், பச்சை மரத்து ஓடை பகுதியில் உள்ள விருந்தினர் மாளிகையில் கைது செய்யப்பட்டார்.

# செய்தியாளர்கள் கிரிக்கெட் போட்டி

# வென்று காட்டிய சிங்கப் பெண்கள்




போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் சார்பில் ‘2026 ஊடக கிரிக்கெட் போட்டி’ நடத்தப்பட்டது. தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் பணியாற்றி வரும் செய்தியாளர்கள் இந்த கிரிக்கெட் போட்டியில் பங்கேற்று உற்சாகமாக விளையாடினர்.

லீக் போட்டிகள், கால் இறுதி போட்டிகள், அரையிறுதி மற்றும் இறுதி போட்டிகள் நடத்தப்பட்டது. இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற அணி, சின்னத்திரை நடிகர் சங்கத்தினருடன் இணைந்து காட்சி போட்டி நடத்தப்பட்டது.

இந்த போட்டிகளில் ஜெயா சூப்பர்கிங்ஸ் அணி வெற்றி பெற்று முதல் இடத்தை பிடித்தது. ஜீ பீனிக்ஸ் 11 அணி 2 இடத்தையும், SIJU ஸ்டார் பாய்ஸ் அணி 3ஆம் இடத்தையும் பிடித்தன.

மேலும் பெண் பத்திரிகையாளர்கள் பங்கேற்ற சிங்கப் பெண்கள் கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது. இதில், SIJU சிங்கப்பெண்கள் அணி அபார வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை ராயப்பேட்டை நியூ கல்லூரி மைதானத்தில் நடந்தது.

வெற்றி பெற்ற SIJU சிங்கப் பெண்கள் அணிக்கு பதக்கம், பரிசு கோப்பையையும் முன்னாள் கிரிக்கெட் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், நிதியமைச்சர் மரிய வில்சன் ஆகியோர் வழங்கி பாராட்டினார். இதே போல அவர் சின்னத்திரை நடிகர் சங்கத்தினருக்கும் பரிசு வழங்கி பாராட்டினார்.










மேலும் முதல் இடத்தை பிடித்த ஜெயா சூப்பர் கிங்ஸ் அணிக்கு நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த், பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி, விளம்பரத் துறைகளின் அமைச்சரான ராஜ்மோகன் ஆகியோர் கோப்பையை வழங்கி பாராட்டினர்.

விழாவில், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் டி.ஜே. சீனிவாசராஜ், **PRO-VOKE LIFESTYLE** நிறுவனரும் தொழில்அதிபருமான டாக்டர் சாம்பால், **BLGROUP** நிறுவனரும் தொழில் அதிபருமான லோகநாதன், அப்பல்லோ மருத்துவமனையின் முதல்நிலை பொது மேலாளர் வீரபிரகாஷ், துணை பொது மேலாளர் தனுஷ்கோடி, **ORANGE SA-**லிளிழி நிறுவனர் திருமதி ராஜ்குமார், **C7 MEDIA** உரிமையாளர் டாக்டர் யோகேஷ்வரி, தம்பி தமிழ் **MEDIA** நிறுவனர் மகேஷ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

விழா ஏற்பாடுகளை தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் தலைவர் சந்திரிகா, பொதுச் செயலாளர் கதிரவன், செயல் தலைவர் வஜ்ரவேல், கௌரவ தலைவர் சாம்பால், பொருளாளர் ராஜ்குமார் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# உடல்நலம் பேணுவோம்



**கோ.நாராயண மூர்த்தி**
குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர்
(ஸ்ரீமதி ராஜாமணி கிளினிக்,
காளையார்கோவில்)

## கோடையில் குழந்தைகளைத் தாக்கும் நோய்கள்

கோடைகாலம் தொடங்கி விட்டாலே விடுமுறைக் காலம் என்பதால் குழந்தைகள் குதூகலிக்கத் தொடங்கிவிடுவார்கள். ஆற்றங்கரைகள், குளத்துமேடுகள், வயல்வெளிகள், தோட்டக்காடுகள் என்று குழந்தைகள் ஆனந்தமாய் விளையாடிச் சுற்றித்திரிந்த காலம் ஒன்றிருந்தது.

அலைபேசி மற்றும் இணையத்தின் வருகை காரணமாக குழந்தைகள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கொண்டிருக்கும் ஒரு சூழல் உருவாகியுள்ளது.

கோடைகாலத்தில் சுற்றுலா, சிறப்பு மற்றும் திறன் பயிற்சி வகுப்புகள் முதலியவற்றிற்காகச் செல்வதைத் தவிர குழந்தைகள் பெரும்பாலும் வீட்டை விட்டு வெளியேறுவதில்லை என்ற போதிலும் கோடை வெப்பத்தின் தாக்கம் குழந்தைகளுக்கு பல்வேறு நோய்களை உருவாக்க வாய்ப்புள்ளது.

அவை யாவை? அவற்றை தடுக்கும் வழிமுறைகள் என்ன? என்பதை பார்ப்போம். வெப்பம் மனித உடலை 3 வழிகளில் தாக்கலாம். 1. Conduction இது சூடான பொருட்களோடு உடலின் பாகங்கள்படுவதால் ஏற்படுவது. 2.Convection– இது வெப்பம் காற்றின் மூலம் பாய்வது. குழந்தைகள் வீட்டுக்குள் இருந்தாலும் வெப்பம் காற்றின் மூலம் கடத்தப்பட்டு அனலாய் வீட்டுக்குள் தாக்குவது இதனால் தான். 3.Radiation வீட்டுச் சமையலறையில் இருக்கும் மைக்ரோ ஓவன் முதலிய சாதனங்களிலிருந்து பரவும் வெப்பம்

### வெப்பத் தாக்கம் (Heat stroke)

கோடையில் அதிக வெப்பத்திற்கு நீண்ட நேரம் வெளிப்படுவதால் ஏற்படும் சோர்வு கலந்த மயக்க நிலை ஆகும். தலைவலி, தலைச்சுற்றல், கை கால் தளர்வு, சிறுநீர் அடர்ந்த மஞ்சள் நிறமாகப் போகுதல் மற்றும் பலவீனம் இதன் ஆரம்ப அறிகுறிகளாகும். இந்நோய் தீவிரமடையும்போது உறுப்பு செயலிழப்பு, சுயநினைவு இழப்பு முதல் மரணம் வரை கூட சம்பவிக்கலாம். தண்ணீர் மற்றும் பனிக்கட்டிகள் மூலம் உடலை குளிர்வித்து முதலுதவி செய்து மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை பெற வேண்டும்.

### நீரிழப்பு (Dehydration)

கோடை காலங்களில் வியர்வை காரணமாக உடலின் முக்கிய உப்புகள் வடிகட்டபடுவதால் உடலுக்கு வழக்கத்தை விட அதிக நீர் தேவைப்படுகிறது. நாம் அதை மீண்டும் தண்ணீர் அருந்தி ஈடுகட்டாவிட்டால் நீரிழப்புக்கு வழிவகுக்கும். உடல் நீரேற்றமாகவும் இயல்பாகவும் செயல்பட தேவையான அளவு தண்ணீர் குடிக்கச் செய்வதின் மூலம் நீரிழப்பைத் தடுக்கலாம். உடலில் உப்புகளை சமநிலைப்படுத்த ஓஆர்எஸ் கரைசலை சீரான இடைவெளியில் எடுக்க வைக்கலாம்.

### உணவு விஷமாதல் (Food poisoning)

வெப்பமான, ஈரப்பதமான வானிலை பாக்டீரியா முதலிய கிருமிகளின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதால் உணவில் விஷம்

ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஆரோக்கியமற்ற, அசுத்தமான, கெட்டுப்போன உணவுகளை உட்கொள்வதால், நோயை உண்டாக்கும் பாக்டீரியாக்கள், வைரஸ்கள், பூஞ்சைகள்,ஒட்டுண்ணிகள், நச்சுகள் மற்றும் ரசாயனப் பொருட்கள். உடலில் நுழைந்த பிறகு வயிற்று அசௌகரியம், குமட்டல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கை ஏற்படுத்துகின்றன.

### கோடை குளிர் (Summer Cold)

கோடையில் பல்வேறு வைரஸ்களால் குழந்தைகளுக்குச் சளித்தொல்லை ஏற்படும். போதுமான அளவு தண்ணீர் மற்றும் வெதுவெதுப்பான பானங்களை அருந்துதல், நல்ல தூக்கம், குளிர்ந்த உணவுகளைத் தவிர்த்தல் மற்றும் மருத்துவரின் ஆலோசனைப் படி மருந்துகள் ஆகியவை சளி மற்றும் இருமலைச் சரி செய்ய உதவும்.

### தோல் நோய்கள் (Skin disease)

வியர்வைச் சுரப்பிகளின் நுண்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு, வியர்வை படிந்து விடுவதால் ஏற்படும் வியர்க்குரு (Prickly heat), மயிர்க் கால்களின் வேர்களில், பாக்டீரியாக்களால் ஏற்படும் சீழ் கோர்த்த சிறு கட்டிகள் (Boil) மற்றும் தோல் ஒவ்வாமை (Skin allergy) ஆகியவை குழந்தைகளுக்கு கோடையில் ஏற்படும் சிறு தோல் நோய்களாகும்.

### கண் நோய்கள் (Eye diseases)

வைரஸ் தொற்றால் கண்சவ்வு அழற்சி ஏற்பட்டு, (Acute Catarrhal Conjunctivitis) வெளிப்புறச் சவ்வையும் கண்ணின் உட்புறத்தையும் பாதிக்கிறது. கொட்டும் உணர்வுடன் கண்கள் சிவந்து நீர் வடியும். கண்வலியைத் தவிர்க்க சன் கிளாஸ்களைப் பயன்படுத்துதல், கண்களைத் தொடுவதைத் தவிர்ப்பது கண் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் பொருட்களைப் பயன்படுத்தாமல் தவிர்த்தல் மூலம் இதைத் தடுக்கலாம்.

### பிற தொற்றுநோய்கள் (Other Infectious Diseases)

தண்ணீர் மற்றும் உணவினால் பரவும், வயிற்றுப் போக்கு மற்றும் டைபாயிடு காய்ச்சல், கொசுக்களினால் பரவும் மலேரியா, டெங்கு ஆகிய நோய்கள் உண்டாகவும் வாய்ப்புண்டு.

### பிற பிரச்சினைகள் (Other Issues)

வறண்ட மற்றும் வெப்பமான வானிலை காரணமாக வளர் இளம்பருவத்தினருக்கு மனச்சோர்வு மற்றும் தலைவலி ஏற்படலாம். பசியின்மை, எடை இழப்பு மற்றும் தூக்கமின்மை அதன் அறிகுறிகளாக இருக்கக்கூடும். முறையான கண்காணிப்பு, கவனிப்பு மற்றும் எளிய சிகிச்சைகள் மூலம் சரிசெய்யலாம். கோடை காலங்களில், சில எளிய முன்னெச்சரிக்கைகள், உங்கள் குழந்தைகளை, பொதுவான கோடை நோய்கள் தாக்காமல் பாதுகாக்க உதவும்.

தினமும் 500 மிலி முதல் 2 லிட்டர் வரை உடலின் எடைக்கு ஏற்றவாறு, குழந்தைகளை தண்ணீர் அருந்த வைக்க வேண்டும். உடலின் போதுமான நீரேற்றம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

தேங்காய் தண்ணீர், எலுமிச்சை சாறு, மோர் உள்ளிட்ட பானங்களை அவ்வப்போது குடிக்க கொடுக்கலாம். தயிர் சாப்பிட்டால் குழந்தைகளுக்கு சளி பிடிக்கும் என்பது தவறு. அதில் உள்ள புரோபயாட்டிக் குடலுக்கு நன்மை செய்து ஒவ்வாமை வராமல் தடுக்கும்.

வெளிர் நிறங்களில், பருத்தியினால் ஆன தளர்வான ஆடைகளை அணிவிக்க வேண்டும். வெயிலில் தொடர்ந்து விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும். வெயிலில் சென்று வியர்வையுடன் வீட்டிற்குள் வந்தவுடன், சோப்பு மற்றும் தண்ணீரால் கை, கால், முகம் முதலியவற்றை நன்றாக கழுவச் செய்ய வேண்டும்.

தெருவோரக் கடைகளில் பச்சையான, சமைக்கப்படாத மற்றும் ஆரோக்கியமற்ற உணவுகளை வாங்கி உண்பதைத் தவிர்க்க வேண்டும். புதிய பழங்கள், காய்கறிகள் மற்றும் முறையாகத் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை உண்ணச் செய்ய வேண்டும். வீட்டின் அறைகளுக்குள் வெப்பம் தாக்காதவாறு ஜன்னல்களுக்கு திரை அணிவித்து தடுக்கலாம்.

குழந்தைகளுக்கு தட்டம்மை,சளி, ரூபெல்லா மற்றும் சின்னம்மை ஆகியவற்றிற்கு எதிராக தடுப்பூசி போடப்பட்டதை உறுதி செய்ய வேண்டும்.

கொசு விரட்டிகளைப் பயன்படுத்தலாம், சருமத்தைப் பாதுகாக்க தரமான களிம்புகளைப் (சன்ஸ்கிரீன்) பயன்படுத்தலாம். புற ஊதாக் கதிர்களைத் தவிர்க்க தொப்பி மற்றும் குளிர் கண்ணாடிகளை அணிவிக்க செய்யலாம்.

மேற்கண்ட எளிய குறிப்பிகளைப் பின்பற்றுவதன் மூலம், குழந்தைகள் பொதுவான கோடைகால நோய்களை வராமல் தடுக்கலாம்.




# மேனுவல் கார்களை ஆட்டோமெட்டிக்காக மாற்றும் அற்புதம்

**கார்** என்பது நமது மனித இயந்திர வாழ்க்கையில் இன்றியமையாத தேவையாக மாறி உள்ளது என்றே கூறலாம். நடுத்தர குடும்பத்தார் அனைவருக்கும் ஒரு கார் வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் கனவாக இருந்த நிலை மாறி, வீட்டிற்கு ஒரு கார் என்ற நிலை வந்துவிட்டது.

லட்சத்தில் ஆரம்பித்து கோடி வரை பல விதமான கார்கள் சந்தையில் உலா வருகின்றன. அந்த வரிசையில் தற்போது ஆட்டொமெடிக் கார் என்பது அனைவரின் விருப்பமாக மாறி உள்ளது. ஏனென்றால் எங்கு சென்றாலும் போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொண்டு கியரை போட்டு கார் ஓட்டுவதற்குள் அனைவரும் ஒரு வழியாகி விடுகிறார்கள். மேலும் கார் ஓட்ட ஆரம்பிக்கும்போது அனைவருக்கும் எழும் சந்தேகம் ஒன்று உள்ளது. எது கிளட்ச்? பிரேக்? ஆக்சிலரேட்டர்? என்பதுதான் அது. இந்த கேள்வி ஆட்டொமெடிக் கார்களில் இல்லை.

காரில் 4வது கியரில் சென்று கொண்டிருக்கும்போது திடீரென பிரேக் போட வேண்டும் என்றால் நாம் கிளட்சை பிடித்து பிரேக் பிடிக்க வேண்டும். இல்லையென்றால் கார் ஆஃப் ஆகிவிடும். ஆனால் இதை பொருத்தினால் அந்த டென்ஷன் நமக்கு இல்லை. பிரேக் பிடித்தால் போதும் கார் மெதுவான பிறகு நாம் கியரை குறைத்துக்கொள்ளலாம்.

இது மாற்றுதிறனாளி வாகன ஓட்டிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும். இருசக்கர வாகனங்களை எப்படி கையாலேயே இயக்க முடியுமோ அதே மாதிரி காரை இயக்கும் வகையில் இவர்கள் மாற்றிக்கொடுக்கிறார்கள்.





ஆனால் ஒரு ஆட்டோமேட்டிக் கார் வாங்க வேண்டும் என்றால் குறைந்தபட்சம் 10 லட்சமாவது வேண்டும். இதில், புதிதாக வாங்குவோருக்கு பிரச்சினையில்லை. ஆனால் ஏற்கனவே மேனுவல் கார் வைத்திருப்பவர்கள் என்ன செய்ய முடியும் என்ற கேள்விக்கு முத்தான பதிலாய் வந்திருக்கிறது சென்னை மேற்கு ஜாபர்கான்பேட்டையில் அமைந்துள்ள பவர் கார் சென்டர் என்ற நிறுவனம்.

இவர்கள் உருவாக்கியிருக்கும் சிட்டி கிளட்ச் என்பதை கொண்டு உங்கள் மேனுவல் காரை ஆட்டோமேட்டிக் காராக மாற்றி இயக்க முடியும்.

இதுகுறித்து அந்த நிறுவனத்தை சேர்ந்த செந்தில் கூறியதாவது: 2003ம் ஆண்டே இதனை உருவாக்கியிருந்தாலும் அதன் பல பரிமாணங்களை உருவாக்கி 7வது வெர்ஷனாக தற்போது ஹைடெக் இன்வென்ஷனாக கொண்டு வந்திருக்கிறார்கள். இதனை காரில் பொருத்தினால் எந்த பிரச்சனையும் வராது. காரை மேனுவல்லாகவும் இயக்கலாம், ஸ்விட்ச் ஆன் செய்து ஆட்டோமேட்டிக்காக மாற்றியும் இயக்கலாம். இதற்கு முழு அங்கீகாரம் பெற்று நடைமுறைக்கும் கொண்டு வந்துள்ளோம்.

இந்த சிட்டி கிளட்ச்ஐ பொருத்திய காரை நாம் இயக்கி பார்த்தபோது மேனுவல் கார் ஓட்டுவதற்கும், ஆட்டோமேட்டிக் கார் ஓட்டுவதற்குமான வித்தியாசம் நமக்கு தெரிந்தது. இதை பொறுத்தினால் கிளட்ச் என்பதில் நமது கால் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

மேலும் சாதரணமாக காரில் 4வது கியரில் சென்று கொண்டிருக்கும்போது திடீரென பிரேக் போட வேண்டும் என்றால் நாம் கிளட்சை பிடித்து பிரேக் பிடிக்க வேண்டும். இல்லையென்றால் கார் ஆ∴ப் ஆகிவிடும். ஆனால் இதை பொருத்தினால் அந்த டென்ஷன் நமக்கு இல்லை. பிரேக் பிடித்தால் போதும் கார் மெதுவான பிறகு நாம் கியரை குறைத்துக்கொள்ளலாம்.

இது மாற்றுதிறனாளி வாகன ஓட்டிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும். இருசக்கர வாகனங்களை எப்படி கையாலேயே இயக்க முடியுமோ அதே மாதிரி காரை இயக்கும் வகையில் இவர்கள் மாற்றிக்கொடுக்கிறார்கள். பலருக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த கார்கள் எந்த பிரச்சினையுமின்றி இயங்கி வருகின்றன.

உயர் ரக நிவிகீ முதல் மாருதி கார் வரை அனைத்து விதமான கார்களுக்கும் இந்த சிட்டி கிளட்சை பயன்படுத்தி மேனுவல்லில் இருந்து ஆட்டோமேட்டிக் வெர்ஷனாக மாற்றிக் கொடுத்துள்ளது இந்த நிறுவனம். ஒவ்வொரு காரின் பிராண்டை பொறுத்து இதற்கான கட்டணம் மாறுகிறது. வரவேற்பும் வாழ்த்துகளும் இருந்தால் மட்டுமே நல்ல முயற்சிகள் வளர்ச்சியடையும். இதுபோன்ற புதிய முயற்சிகளுக்கு மக்கள் ஆதரவு அவசியம். அப்போதுதான் உள்நாட்டில் இதுபோன்ற ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

# Building Stronger Children Naturally: Improving Immunity with Homeopathy

## Why Are Children Falling Sick So Frequently?











Prof. Dr. Ganesh Laxmanan

Every parent today has noticed a worrying pattern — children seem to be falling sick more frequently than ever before. Recurrent colds, allergic coughs, sinus infections, wheezing, poor appetite, skin allergies, repeated fevers, and constant antibiotic courses have become almost routine in many households. A child recovers for a few days, returns to school, and then falls sick again after the next weather change or viral exposure. Parents are exhausted, children miss school and playtime, and families slowly begin to accept frequent illness as "normal childhood."

But an important question must be asked: if children today are receiving more medicines, supplements, and immunity syrups than previous generations, why are so many becoming less resilient?

### Immunity Is More Than Fighting Germs

Modern medicine has undoubtedly saved millions of lives, especially in severe infections and emergencies. However, one limitation of the current approach is that it often focuses heavily on controlling acute symptoms rather than improving the child's long-



term resistance. Many parents are trapped in a cycle of repeated antibiotics, cough syrups, nebulizers, and temporary relief. While these interventions may sometimes be necessary, repeated dependence on symptomatic treatment alone may not address the deeper susceptibility that makes certain children fall sick again and again.

Immunity is not merely about "killing germs." The immune system is an intelligent balancing network that learns, adapts, regulates inflammation, and develops resilience over time. A healthy child is not one who never encounters infections, but one whose body can respond appropriately and recover efficiently.

## The Modern Lifestyle Problem

One of the biggest overlooked factors affecting immunity today is modern lifestyle itself. Children are increasingly exposed to processed foods, excessive sugar, irregular sleep schedules, reduced outdoor activity, emotional stress, pollution, excessive screen exposure, and repeated medication use that can disturb natural biological balance.

Scientific research now strongly supports the role of gut health in immunity. A large portion of immune regulation is connected to the intestinal microbiome. Many children with recurrent respiratory infections also suffer from digestive disturbances such as poor appetite, bloating, constipation, or food sensitivities. Excessive junk foods and repeated unnecessary antibiotic use may disturb beneficial gut bacteria, weakening the body's ability to regulate immune responses properly.

This does not mean antibiotics should never be used — they can be lifesaving when genuinely required — but they should be used carefully and judiciously.

## How Homeopathy Looks at Immunity

This is where homeopathy offers a fundamentally different perspective. Homeopathy does not merely focus on the name of the disease. Instead, it studies the individual child's susceptibility pattern.

Why does one child develop wheezing after every cold while another recovers easily? Why does one child repeatedly develop throat infections while another develops skin allergies? Why are some children constantly dependent on medications despite normal investigations?

In homeopathy, recurrent illness is often viewed as a sign that the child's internal balance and adaptive capacity need strengthening. The objective is not simply suppressing symptoms temporarily, but improving the child's constitutional resistance over time.

Homeopathic treatment is individualized. Two children with recurrent cough may receive entirely different medicines based on their constitution, emotional nature, food cravings, thermal sensitivity, sleep patterns, fears, behavioral tendencies, and family history. This individualized approach is one of the reasons many parents seek homeopathy for chronic recurrent conditions in children.

Natural Strategies That Support Immunity

Simple daily habits can significantly improve a child's resistance when consistently followed.

## Proper Sleep

Deep sleep is one of the strongest immune regulators. Children who sleep late regularly often show poorer recovery and increased irritability.

Outdoor Activity

Sunlight exposure and outdoor play help improve physical stamina, vitamin D balance, and immune resilience.

## Healthy Food Habits

Reducing ultra-processed foods, packaged snacks, sugary beverages, and artificial additives helps decrease chronic inflammation in the body.

## Better Gut Health

Balanced home-cooked meals rich in fruits, vegetables, hydration, and fiber support gut mi-

crobiome diversity and digestion.

Emotional Stability

Children who experience constant academic pressure, fear, anxiety, overstimulation, or family stress often show weaker resistance and slower recovery patterns.

## Individualized Homeopathic Care

Proper constitutional homeopathic treatment aims to improve the child's adaptive response and reduce recurrent susceptibility over time.

A Story Many Parents Will Relate To

Eight-year-old Arjun had become known in school as "the child who is always sick." Every month brought another episode of fever, cough, wheezing, or sinus infection. His mother stopped planning outings because he would frequently fall ill before important occasions. Multiple treatments gave temporary relief, but the cycle continued.

Eventually, a detailed constitutional homeopathic evaluation was done, considering not only his infections but also his sleep habits, fears, food cravings, sweating tendency, emotional sensitivity, and family allergy history. Along with dietary correction and lifestyle regulation, individualized homeopathic treatment was started.

The first improvement was subtle — the infections became less severe. Then the intervals between illnesses increased. Over several months, the child gradually regained stamina, appetite, and confidence. He still occasionally developed normal seasonal illnesses like any child, but the constant cycle of sickness had significantly reduced.

For the parents, the biggest relief was no longer living in fear of the "next illness."

## Addressing the Skepticism

Many parents naturally ask: "Is homeopathy scientific?"

It is an important and valid question. Homeopathy continues to be debated scientifically, particularly regarding its mechanism of action. However, millions of families worldwide continue to use it as an integrative approach for recurrent childhood illnesses, allergies, and chronic susceptibility patterns.

Responsible homeopathy should never dis-



courage emergency care, necessary investigations, vaccinations, or lifesaving conventional treatment when required. Rather, it should function as part of a broader strategy aimed at improving long-term health and resilience.

Parents must also understand that true immunity improvement is gradual. No genuine system can permanently strengthen immunity overnight. Real immune development takes time, consistency, and proper support.

The Bigger Concern for Today's Generation

Many children today are growing up in environments that constantly weaken their biological adaptability — processed foods, sedentary lifestyles, disturbed sleep, chronic stress, pollution, and excessive medication exposure. If the focus remains only on suppressing symptoms repeatedly without improving foundational health, the long-term consequences may become even greater.

Children do not simply need more medicines; they need stronger resilience.

The encouraging reality is that the human body still possesses remarkable healing intelligence when supported appropriately. Through better lifestyle habits, emotional stability, nutritional correction, responsible medical care, and individualized homeopathic support where suitable, many children can gradually become healthier, stronger, and more resistant over time.

And for countless parents struggling with repeated childhood illness, that possibility itself brings back something deeply important — hope, confidence, and empowerment.

# Artificial Intelligence Is No Longer Optional for Business




For decades, technology gave businesses efficiency. Today, artificial intelligence is redefining competitiveness itself. AI is no longer an experimental tool reserved for innovation labs — it has become a core operating capability shaping how companies produce, decide, compete, and grow. Across industries, the question has shifted from "Should we adopt AI?" to "How fast can we integrate it responsibly and at scale?"

Key takeaway: The next generation of startups is being built global-first, not local-first.

## From Automation to Intelligence:

Earlier waves of digital transformation focused on automating repetitive tasks. AI goes further — it enables systems to learn, predict, and adapt. This evolution allows businesses to move from reactive decision-making to predictive and, increasingly, autonomous operations. In manufacturing, AI optimizes production flows and reduces downtime. In finance, it enhances risk assessment and fraud detection. In services, it personalizes customer engagement and improves operational accuracy. The value lies not just in speed, but in decision quality. AI is becoming the invisible layer powering everyday business processes.

## AI as a Strategic Advantage:

What separates AI leaders from laggards is not access to technology, but strategic intent. Organizations that treat AI as a side project struggle to generate impact. Those embedding it into core business models are reshaping entire value chains.

## Key areas where AI is delivering competitive advantage:

Demand forecasting and inventory optimi-

Trust is becoming a competitive differentiator. Companies that build responsible AI frameworks — balancing innovation with oversight — will gain confidence from customers, regulators, and investors alike. AI strategy without governance is not innovation; it is risk.




zation - Intelligent pricing and revenue management - Predictive maintenance and quality control - Customer insights and personalization - Talent analytics and workforce planning. TECHNOLOGY FEATURE AI transforms data from a passive asset into a strategic weapon.

## The Human–Machine Equation

Contrary to popular fears, AI is not simply replacing jobs — it is redefining roles. Routine tasks are increasingly automated, while human effort shifts toward judgment, creativity, strategy, and relationship management. The most successful organizations focus on augmentation, not replacement. Employees equipped with AI tools outperform those without them. This creates a widening productivity gap between AI-enabled businesses and those resisting change. Leadership capability, digital literacy, and change management are now as important as algorithms.

## Barriers to Adoption:

Why Many Businesses Still Struggle Despite its potential, AI adoption remains uneven. Common challenges include Poor data quality and fragmented systems Lack of clear use cases aligned with business goals Skills shortages and cultural resistance Ethical, regulatory, and governance concerns For many firms, the issue is not technological readiness but organizational readiness. AI requires new operating models, stronger governance frameworks, and cross-functional collaboration.

## Risk, Ethics & Trust:

Risk, Ethics & Trust As AI systems influence more decisions, questions of accountability and transparency grow louder. Businesses must address issues such as bias, data privacy, explainability, and regulatory compliance. Trust is becoming a competitive differentiator. Companies that build responsible AI frameworks — balancing innovation with oversight — will gain confidence from customers, regulators, and investors alike. AI strategy without governance is not innovation; it is risk.

## The Cost of Inaction:

Perhaps the greatest risk businesses face today is delay. As AI adoption accelerates, late movers may find themselves locked out of efficiency gains, innovation cycles, and market relevance. AI compounds advantage. Early adopters learn faster, optimize quicker, and scale smarter. Over time, this gap becomes difficult to close. The future will not belong to companies that adopt the most AI — but to those that adopt it wisely, early, and strategically.



# THE NIGHT THE GROUND BROKE TWICE

## Inside Venezuela's deadliest earthquake in more than a hundred years

On the evening of June 24, 2026, the earth under Venezuela's Caribbean coast let go twice in the space of thirty-nine seconds. What followed was one of the worst natural disasters the country has ever recorded: thousands dead, tens of thousands hurt, and a whole region left to dig through broken concrete with its bare hands.

It happened just after six in the evening. People were home from work, cooking dinner, watching television. Then, without warning, the ground began to shake. Survivors later said it felt like a roar rising up from underneath them, or like the sound of an airplane engine right outside the window. Walls cracked. Ceilings came down. And before anyone could catch their breath, a second, even stronger shock hit.

The first earthquake measured magnitude 7.2. Less than a minute later, a second one measured 7.5. Scientists call this rare one-two punch a "doublet": two separate earthquakes, on two nearby faults, striking almost back to back. It is not common, and when it happens, the damage is far worse than a single quake of the same size, because buildings that survive the first shock, already cracked and weakened, have no time to recover before the second one arrives.

"It was like a roar. I thought I was going to die."

The epicenters were near the town of Morón, on Venezuela's Caribbean coast, roughly a hundred miles west of the capital, Caracas. But the shaking reached far beyond that. It was felt in Puerto Rico, in the Dominican Republic, and even as far away as Trinidad. Experts say it was the strongest earthquake to hit Venezuela since the year 1900.

## WHY THE GROUND GAVE WAY

Venezuela sits on a messy, crowded border where two of the earth's giant tectonic plates, the Caribbean Plate and the South American Plate, grind past each other. Under the country runs a web of cracks called the Boconó fault system, which meets another set of cracks called the San Sebastián fault system near the coast. Most days, these faults sit still. But stress builds up along them for decades, sometimes centuries, until something finally slips.

Scientists believe the first earthquake triggered the second. The shaking from the first quake added extra pressure onto the second fault, which sat closer to the surface, until it too broke loose. That is why the two quakes had almost identical fingerprints, striking in nearly the same place, at nearly the same strength, seconds apart. In the weeks since, the ground has kept trembling, with more than four hundred smaller aftershocks recorded.

The damage this caused was staggering. A NASA satellite analysis later estimated that close to 59,000 buildings across the region were damaged or destroyed. Officials counted more than 250 structures that had completely collapsed, most of them in Caracas and in the coastal state of La Guaira, which acting President Delcy Rodríguez called a genuine disaster zone. Cracks even opened up in the runways and terminal of Simón Bolívar International Airport, the country's main gateway to the outside world.

## A COUNTRY IN THE DARK

Making a bad situation worse, Venezuela already had one of the most tightly controlled internet and media systems in the world before the earthquakes struck. More than two hundred websites, including local and international news sites, social media platforms, and tools people use to get around government censorship, were blocked. That made it agonizingly difficult for families abroad to find out whether their loved ones were safe, and slowed the flow of information that rescue teams badly needed.

The United Nations publicly urged Venezuelan authorities to lift the restrictions, warning that in a disaster like this, access to reliable information is not a luxury; it can be the difference between life and death. Under pressure, the government partially restored access to some platforms in the days that followed, though gaps in official reporting continued to fuel confusion over the true scale of the disaster.

## DIGGING THROUGH THE RUBBLE

In the first hours, the numbers climbed by the hour. On the first night, officials said 188 people had died. By the next week, it was past 1,700. Within days it crossed 2,200. As of the first week of July, Venezuela's government put the confirmed death toll at 3,535, with nearly 16,800 people injured and almost 18,000 left without a home. International agencies have warned that the real number of dead could end up far higher, possibly into the tens of thousands, once all the rubble is finally cleared.

Rescue crews worked around the clock in La Guaira and Caracas, the two places hit hardest. Families stood outside crushed apartment blocks for days, listening for any sound from beneath the debris. Some got a miracle. Days after the quakes, rescuers were still pulling survivors out alive, including seven people freed from the wreckage nearly a week later. But for many more, the wait ended in the worst possible way. In one Caracas neighborhood alone, seven bodies were later found inside the ruins of a single collapsed building.

"We will procure ten thousand body bags. The toll is expected to keep rising."

Entire families lost everything but the clothes they were wearing. One woman described grabbing only a few biscuits, some water, and a change of underwear before fleeing her cracked apartment, unsure if it would still be standing by morning. Tens of thousands of people are now living in tents, school gyms, and hastily set-up shelters, uncertain when, or if, they will ever go home.

## HELP POURS IN, SLOWLY

Despite years of tension between Venezuela

and Washington, the United States moved quickly to help, sending two of its most experienced urban search and rescue teams, from Fairfax County, Virginia, and Los Angeles County, along with medical supplies and other aid. Mexico sent a team of rescuers and health workers from its defense ministry. Countries including El Salvador, the Dominican Republic, Australia, and Brazil also offered support, supplies, or condolences.

The timing could hardly have been worse for Venezuela. The country was already deep in a political and economic crisis, and the earthquakes struck just months after the United States captured former president Nicolás Maduro in a military raid. That backdrop of instability has made an already difficult recovery even harder, with limited government resources stretched thin across a disaster of this size.

## A LONG, HARD ROAD BACK

For Venezuela, the earthquakes were only the beginning of the crisis, not the end of it. United Nations officials say roughly 1.8 million people now need humanitarian help, and that includes an estimated 680,000 children, according to UNICEF. Aid workers warn of a second wave of suffering still to come: infections spreading through crowded shelters, wounds left untreated because hospitals are overwhelmed, and a health care system that was already struggling long before the ground shook.

Officials with the UN's humanitarian office have stressed that recovery here will not be measured in weeks, but in months and years. Clearing debris, rebuilding homes, repairing schools and hospitals, and simply helping people process what they have lived through will all take time. Aid workers say emotional support is just as urgent as food and clean water right now. Families are waiting for news of missing relatives, some already suspecting the worst, while others have been forced to move from a real home into a shelter overnight, a change that is far harder than it sounds.

"There are people who need a hug."

Scientists have also delivered an uneasy



warning: this stretch of Venezuela's coast is not finished shaking. Aftershocks are expected to continue for months. In the days right after the twin quakes, experts put the odds at nearly one in two that another earthquake of magnitude 6 or higher would strike the same area within a week, a reminder that in earthquake country, the story is rarely over when the shaking stops.

For now, the numbers keep being updated, the graves keep being dug, and the country keeps counting what it has lost. But behind every statistic in this story is a person: someone who threw themselves to the floor and prayed, someone who ran into the street and watched their neighbor's building fall, someone still hoping for one more voice to call back from beneath the rubble. Venezuela's earthquake will fade from world headlines faster than it will fade from the lives of the people who survived it.

MEDIA CRICKET CHAMPIONSHIP 2026

உழைப்பு! நம்பிக்கை..! தலைநிமிர்!

தென்னிந்திய
பத்திரிகையாளர்கள் யூனியன்
SOUTH INDIA JOURNALISTS UNION













தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் சார்பில் நடைபெற்ற "போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி"யில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்த மாண்புமிகு சபாநாயகர், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், சென்னை மாநகர காவல் ஆணையர், அரசியல் கட்சி தலைவர்கள், கிரிக்கெட் வல்லுநர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் போட்டியில் பங்கேற்று சிறப்பித்த சின்னத்திரை நட்சத்திரங்கள், ஊடகத்துறை நண்பர்கள் மற்றும் SIJU குடும்ப உறவுகள் அனைவருக்கும்...

**SIJU குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.**




Published by S Esuf Basha, Printed Ali Mohamed Sayeed, Published at No.4, Pandiyan Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai & 600 041, Printed at J.M.Process No.29, V.N.Dass Road , Border Thottam, Mount Road, Chennai&600002, Editor. S.Esuf Basha